பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
வர்த்தமானப் பத்திரிகை

2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய
பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2007. 09. 24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# தேசிய இரத்தமேற்றல் சேவை

**இரத்தமேற்றல் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும்; தேசிய இரத்தம் பற்றிய கொள்கைக்கு பயனளிப்பதற்காக நாடு முழுவதும் பயனுறுதிமிக்க பாதுகாப்பான இரத்தத்தின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கும் ; மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சரவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 15.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

யளிக்கவும் பரிகாரம் பெற்றுக்கொள்ளவும் பயன்படுகின்ற அல்லது பயன்பட முன்னுணர்வதாக அமைகின்ற ஏதேனும் வளவு எனப்பொருள்படும் என்பதுடன் இலங்கை மருத்துவ பேரவையுடன் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர் ஒருவரின் தலைமையிலான ஒரு மருத்துவமனை, சிகிச்சையளிக்கும் நிலையம், பிரசவ விடுதி, பல் வைத்தியசாலை, மருந்தகம், சத்திரசிகிச்சை அத்துடன் கூட்டுறவு மருத்துவமனையையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

“இரத்தம்” என்பது, எல்லா மனித இரத்தம் எனப் பொருள்படும் ;

“இரத்த வங்கி” என்பது, இரத்தத்தை அல்லது இரத்தக் கூறுகளை சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான வசதிகளை வழங்கக்கூடிய ஓர் இடம், ஒழுங்கமைப்பு, அலகு அல்லது நிறுவனம் எனப் பொருள்படுவதோடு இரத்தம் அல்லது இரத்தக்கூறுகளைச் சேகரிப்பதற்கும் பதப்படுத்துவதற்குமான வசதிகளைக் கொண்டுள்ள அல்லது கொண்டில்லாத ஓர் இடம், ஒழுங்கமைப்பு எனவும் பொருள்படும் ;

“இரத்தக்கூறு” என்பது, நோயாளர்களுக்கு ஏற்றப்படும் நோக்கத்துக்காக முழு இரத்தத்தை அல்லது நுண்ணிழையங்களைப் பொறிமுறை சார்ந்த முறையில் பிரிதெடுக்கும் நடவடிக்கையில் தயாரிக்கப்பட்ட குருதி ஆக்கக் கூறுகள் எனப்பொருள்படும் ;

“தானம் செய்பவர்” என்பவர் பணமாக அல்லது வேறு வகையாக ஏதேனும் மூலத்திலிருந்து ஏதேனும் பிரதி பலனை கைமாறாகப் பெறாது, பணிப்பாளர் – நாயகத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான வரையறைகளை திருப்திப்படுத்துகின்றவருமான ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

வரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன்கீழ் அதற்கு முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நிலைமாறு ஏற்பாடுகள்.

**25.** (1) 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு இரத்த வங்கியொன்றைத் தொழிற்படுத்துகின்ற ஏதேனும் சிகிச்சையளிக்கும் மனை இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஒன்பது மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு இரத்த வங்கியொன்றைத் தொடர்ந்து தொழிற்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்பது மாதகாலப்பகுதியில் ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவடைந்ததன்மீது, ஏதேனும் இரத்த வங்கியைத் தொடர்ந்து தொழிற்படுத்துவதற்கு தனியார் மருத்துவ நிறுவனமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உரிமம் ஒன்றுக்காக விண்ணப்பத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**26.** இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**27.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,—

“தனியார் மருத்துவ நிறுவனம்” என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின்கீழ் சிகிச்சையளிக்கும் நிறுவனமொன்றாக பதிவு செய்யப்பட்டு, ஏதேனும் நோயினால், ஊறினால் அல்லது பலவீனத்தினால் துயருறும் ஆட்களை ஏற்றுக்கொள்ளவும், அவர்களுக்கு சிகிச்சை



ச.வ.ஓ. 43/2001

**இரத்தமேற்றல் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும்; தேசிய இரத்தம் பற்றிய கொள்கைக்கு பயனளிப்பதற்காக நாடு முழுவதும் பயனுறுதிமிக்க பாதுகாப்பான இரத்தத்தின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கும்; மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

முன்னுரை.

பாதுகாப்பான இரத்தத்தைப்பெற இயலக்கூடியதாதல் ஒவ்வொரு மனிதனதும் அங்கீகரிக்கப்பட்ட உரிமையாக உள்ளதாகும். எனவே இரத்தம் விலைமதிப்புள்ள ஒரு மனிதவளம் என்பதுடன், இரத்த மேற்றல் நாட்டின் சுகாதார முறைமையின் முக்கிய பாகமொன்றாக அமைவதாதலாலும் :

தேசிய இரத்தமேற்றல் சேவையானது நாடு முழுவதும் இரத்தமேற்றல் சேவையை அமுலாக்கும் பொறுப்புக்கு உள்ளாக்கப்படுமென்பதாலும், இரத்தமேற்றலானது உயிரைக்காக்கக்கூடிய அல்லது உகந்த முறையில் பயன்படுத்தப்படாவிடின் இழக்கச் செய்யக்கூடியது என்ற வகையில் இரத்தமேற்றல் சேவையைப் பயன்படுத்தலுக்கு அதிமுன்னுரிமை அளிக்கப்படல் வேண்டுமென்பதாலாலும் :

இரத்தத்தினதும், அதன் கூறுகளினதும் பாதுகாப்பானதும், போதிய தாந்தன்மையினதானதும், பயனுறுதியுடையதுமான சேவை மற்றும் பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெறுமாயிருத்தலை உறுதிப்படுத்துவதற்காக தேசிய இரத்தம் பற்றிய கொள்கையொன்று வகுத்தமைக்கப்பட்டுள்ளதாதலாலும் :

தேசிய இரத்தம் பற்றிய கொள்கையை பயனுறுதியுடனும் திறனாகவும் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் நோக்குடன் தேசிய இரத்தம் பற்றிய கொள்கைக்கு சட்ட அங்கீகாரத்தை வழங்குவது அவசியமானதாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

2–PL 001510–225 (2006/10)

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2007ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேசிய இரத்தமேற்றல் சேவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் - I

### தேசிய இரத்தமேற்றல் சேவையின் பொறுப்புக்களும் கடமைகளும்

தேசிய இரத்தமேற்றல் சேவை.

2. (அ) (i) பாதுகாப்பு அமைச்சின்கீழ் வரும் வைத்திய சாலைகள் உள்ளிட்ட அரசாங்க வைத்திய சாலைகள் ; அத்துடன்

(ii) தனியார் மருத்துவ நிறுவனங்கள்,

ஆகியவற்றிலுள்ள நோயாளிகளுக்குப் பாதுகாப்பான இரத்தம் அல்லது இரத்தக்கூறுகள் ஏற்றப்படுவதற்காகப் பயன்படுத்தப் படக் கருதப்படும் இரத்தத்தைச் சேகரிப்பதற்கும், பரீட்சிப்பதற்கும், பதப்படுத்துவதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும், விநியோகிப் பதற்கும் ; அத்துடன்

(ஆ) விரிவானதும், தரமிக்க உத்தரவாதமுள்ளதுமான அணுகுமுறையினதும் ஊடாக, நாடு முழுவதும் இரத்தமேற்றல் சேவையின் தரத்தைப் பலப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற் கும்,

சுகாதார அமைச்சில் பொறுப்பானதாக இருக்கவேண்டிய தேசிய இரத்தமேற்றல் சேவையொன்று இருத்தல் வேண்டும்.

இரத்தமேற்றல் சேவையின் கடமைகள்.

3. இரத்தமேற்றல் சேவையின் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) ஆபத்துக் குறைந்த, தன்னிச்சையான வேதனமற்ற தானம் அளிப்பவர்களிடமிருந்து மட்டுமே இரத்தம்



(உ) தொற்றுக்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன் எச்சரிக்கைகளை உள்வாங்குதல் ;

(ஊ) ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனம் அல்லது அதனைச் சேர்ந்த வேறு எவ்வாளுக்கும் எதிராக இன்னலுற்ற எவரேனுமாளினால் செய்யப்பட்ட ஏதே னும் முறைப்பாட்டை ஏற்றுக் கவனிக்கவும் கையாளவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை அல்லது நடைமுறை ;

(எ) இரத்தம் அல்லது இரத்தக்கூறுகளைச் சேகரித்தல், பேணிக்காத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பரீட்சித் தல் என்பவற்றுக்கான முறை ;

(ஏ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் ;

(ஐ) இரத்தப் பகுப்பாய்வு செய்தல் அல்லது பரிசோதித்தலில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, மாதிரி களை எடுத்தல், இரத்த அல்லது இரத்தக் கூறுகளைப் பகுப்பாய்வு செய்தல் அல்லது பரிசோதிப்பதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ; அத்துடன்

(ஒ) ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு விநி யோகிக்கப்படும் இரத்த அலகு அல்லது இரத்தக்கூறுகள் ஒவ்வொன்றுக்கும் விதிக்கப்படவேண்டிய கட்டண வீதம்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரை வாக அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன் கொண்டு

## பாகம் IV

### பொதுவானவை

ஒழுங்குவிதிகள்.

**24.** (1) அமைச்சரானவர் விதித்துரைக்கப்பட இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் எவ்வொழுங்குவிதிகள் ஆக்கப்படத் தேவைப் படுத்தப்பட்டுள்ளதோ அவ்வொங்குவிதிகள் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி அமைச்சரானவர் பின்வரும் ஏதேனும் அல்லது எல்லாக் கருமங்க ளுக்காக அல்லது கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :–

(அ) விண்ணப்பப் படிவமும், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்களும், அத்துடன் வழங்கப்பட வேண்டிய உரிமத்தில் படிவமும் மற்றும் எந்நியதி நிபந்தனைகளுக்கமைவாக உரிமம் வழங்கப்படவேண் டுமோ அந்நியதி நிபந்தனைகள் ;

(ஆ) தேசிய இரத்தமேற்றல் சேவை மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் இரத்த வங்கிகளில் வைத்தி ருக்கப்படவேண்டிய அல்லது பேணப்படவேண்டிய பதிவேடுகள், புத்தகங்கள், இடாப்புகள், பற்றுச்சீட்டுகள், கூற்றுக்கள், படிவங்கள் அல்லது வேறு ஏதேனும் ஆவ ணங்கள் ;

(இ) இரத்தம் அல்லது இரத்தக் கூறுகளில் சேர்க்கை தரம், தோதான பயன்பாடு என்பவற்றில் தேவைப்படுத்தப் பட்ட தேசிய நியமங்கள் ;

(ஈ) பணியாட்டொகுதி அமைப்புக்களை வரையறுத்தல், (ஆகக் குறைந்த தகைமைகள் உள்ளடங்கலாக) ஆரம்பப் பயிற்சி, உள்ளகப் பயிற்சி மற்றும் தேசிய இரத்தமேற்றல் சேவை மற்றும் இரத்த வங்கிகளைச் சேர்ந்த ஆட்களால் பின்பற்றப்பட வேண்டிய கற்கை நெறிகள் ;



சேகரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற் காக தானம் அளிப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனத்தைப் பிரயோகித்தல் ;

(ஆ) பின்வருவன உள்ளடங்கலாக, ஏதேனும் கடத்தப்படக் கூடிய தொற்றுக்கள் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்காக தானம் செய்யப்பட்ட எல்லா இரத்தத்தையும் பரீட்சித்தல்

(i) மனித நோய் எதிர்ப்புச் சக்திக் குறைப்புத் தொற்று (எச். ஐ. வி.) ;

(ii) கல்லீரல் அழற்சி 'பி' மற்றும் 'சி' (ஹேபடைட்டிஸ்);

(iii) சிவிலிஸ் ;

(iv) மலேரியா ; அத்துடன்

(v) உலக சுகாதார அமைப்பினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளை அடிப்படையாகக் கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக் கக்கூடியவாறான வேறு ஏதேனும் தொற்று ;

(இ) எல்லா இரத்தத்தையும் பதப்படுத்துதலும், இரத்தக் கூறுகளைத் தயாரித்தலும் ;

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமத் துக்கு இணங்க, இரத்தம் மற்றும் இரத்தக்கூறுகளைக் களஞ்சியப்படுத்தல் ;

(உ) எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த இரத்தத்தையும் கையிருப்பில் இருக்கச் செய்வதையும் அணுகக்கூடிய தனையும் இயலுமானளவு உறுதிப்படுத்துதல் ;

(ஊ) தேசிய இரத்தமேற்றல் சேவைகள், அரசாங்க வைத்திய சாலைகள் மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் பணியாற்றொகுதி உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல்;

2

(எ) இரத்தமேற்றலுக்காக தேசிய உசாத்துணை ஆய்வுகூடமொன்றை அபிவிருத்தி செய்தல் ;

(ஏ) தானமளிப்பவர்களைத் தேர்ந்தெடுத்தல், இரத்தத்தையும் இரத்தக்கூறுகளையும் சேகரித்தல், பரீட்சித்தல், பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், வழங்கல், இடம் பெயர்த்தல் மற்றும் தோதான பயன்பாடு என்பன தொடர்பிலும் ; இரத்தமும் இரத்தக்கூறுகளும் பயன்படுத்தப்படவேண்டிய முறை தொடர்பிலும் ,—

(i) தேசிய இரத்தமேற்றல் சேவையின் பணியாட்தொகுதி உறுப்பினர்களுக்கும் ;

(ii) அரசாங்க வைத்தியசாலைகளில் இரத்தமேற்றல் கூறுகளை முகாமைசெய்யும் அத்தகைய உறுப்பினர்களுக்கும், அத்துடன் அத்தகைய நிறுவனங்களைச் சேர்ந்த சிகிச்சை பணியாட்தொகுதியினருக்கும்,

(iii) தனியார் மருத்துவ நிறுவனங்களில் இரத்த மேற்றல் கூறுகளை முகாமை செய்யும் அத்தகைய உறுப்பினர்களுக்கும், அத்துடன் அத்தகைய நிறுவனங்களைச் சேர்ந்த சிகிச்சை பணியாட்தொகுதியினருக்கும் ;

வழிகாட்டிகளை வழங்குதல் ;

(ஐ) (i) நோயாளிகளுக்கு வழங்கப்படும் அல்லது ஏற்றப்படும் இரத்தமும், இரத்தக்கூறுகளும் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கிணங்க பரிசோதனை செய்யப்பட்டு பரீட்சிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தேசிய இரத்தமேற்றல் சேவையினால் பயிற்றப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மட்டுமே, இரத்த வங்கித் தொழில் நடவடிக்கைகளில் அரசாங்க வைத்தியசாலை மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் ஆகிய இரண்டிலும் ஈடுபடுவார்கள் என்பதையும்,

உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் ;



களின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதையும் ஆய்ந்துணருவதற்காகவும், தோதான நடவடிக்கைக்காக குழுவின் தவிசாளருக்கு விதந்துரைகளைச் செய்வதை உறுபதிப்படுத்துவதற்காகவும் அத்தகைய வங்கியில் பேணப்படத் தேவைப்படுத்தப்பட்ட பதிவுகளைப் பரிசோதிப்பதற்காகவும், இரத்த வங்கியொன்று தாபிக்கப்பட்டுள்ளதும் இரத்தமேற்றல் நடபடிமுறைகள் கொண்டு நடாத்தப்படுவதுமான ஏதேனும் வளவுகளுக்குள் ஏதேனும் நியாயமான நேரங்களில் உட்பிரவேசிப்பதற்கு குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது குழு சார்பில் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அதிகாரமளித்தல் ;

(ஆ) உரிமம்பெற்ற நிறுவனத்துக்கு வழங்கப்படும் உரிமத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைக் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்வதும், தேவைப்படுத்தப்பட்ட நியமனங்களைப் பேணுவதற்காக அவைகளை மாற்றுதலும் திருத்துதலும் ;

(இ) தேசிய இரத்தமேற்றல் சேவைக்குச் செலுத்தப்பட்ட இரத்த அலகொன்றின் செலவு மற்றும் வேறு ஏதேனும் சேவை விதிப்பனவுகளை மீளப் பெறுவது தவிர்த்து, நோயாளி சம்பந்தமான வேறு பயன்பாட்டுக்காக எவரேனுமாளுக்கு இரத்தம் அல்லது இரத்தக் கூறுகள் விற்கப்படுவதைத் தடுத்தல் ;

(ஈ) நோயாளர் பராமரிப்புக்காக தரமிக்க, உத்தரவாத நிகழ்ச்சித்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் அது அமுலாக்கப்படுவதனைக் கண்காணித்தலும் ;

(உ) இரத்தப் பாதுகாப்பு மற்றும் தேசிய இரத்தம் பற்றிய கொள்கையை அமுலாக்குதல் சம்பந்தமான எல்லாக் கருமங்கள் குறித்தும் அமைச்சருக்கு ஆலோசனை கூறலும் விதந்துரைகளைச் செய்தலும் ;

(ஊ) மருத்துவ அலுவலரொருவரால் அல்லது வேறு அலுவலரொருவரால் இணங்கியொழுகாமை விடயத்தில் பணிப்பாளர் – நாயகத்தினால் எடுக்கப்படவேண்டிய செயல்களை இனங்காணல்.

## பாகம் IV

### பொதுவானவை

ஒழுங்குவிதிகள்.

**24.** (1) அமைச்சரானவர் விதித்துரைக்கப்பட இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் எவ்வொழுங்குவிதிகள் ஆக்கப்படத் தேவைப் படுத்தப்பட்டுள்ளதோ அவ்வொழுங்குவிதிகள் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி அமைச்சரானவர் பின்வரும் ஏதேனும் அல்லது எல்லாக் கருமங்க ளுக்காக அல்லது கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :–

(அ) விண்ணப்பப் படிவமும், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்களும், அத்துடன் வழங்கப்பட வேண்டிய உரிமத்தில் படிவமும் மற்றும் எந்நியதி நிபந்தனைகளுக்கமைவாக உரிமம் வழங்கப்படவேண்டுமோ அந்நியதி நிபந்தனைகள் ;

(ஆ) தேசிய இரத்தமேற்றல் சேவை மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் இரத்த வங்கிகளில் வைத்திருக்கப்படவேண்டிய அல்லது பேணப்படவேண்டிய பதிவேடுகள், புத்தகங்கள், இடாப்புகள், பற்றுச்சீட்டுகள், கூற்றுக்கள், படிவங்கள் அல்லது வேறு ஏதேனும் ஆவணங்கள் ;

(இ) இரத்தம் அல்லது இரத்தக் கூறுகளில் சேர்க்கை தரம், தோதான பயன்பாடு என்பவற்றில் தேவைப்படுத்தப்பட்ட தேசிய நியமங்கள் ;

(ஈ) பணியாட்டொகுதி அமைப்புக்களை வரையறுத்தல், (ஆகக் குறைந்த தகைமைகள் உள்ளடங்கலாக) ஆரம்பப் பயிற்சி, உள்ளகப் பயிற்சி மற்றும் தேசிய இரத்தமேற்றல் சேவை மற்றும் இரத்த வங்கிகளைச் சேர்ந்த ஆட்களால் பின்பற்றப்பட வேண்டிய கற்கை நெறிகள் ;

2



சேகரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக தானம் அளிப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனத்தைப் பிரயோகித்தல் ;

(ஆ) பின்வருவன உள்ளடங்கலாக, ஏதேனும் கடத்தப்படக் கூடிய தொற்றுக்கள் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்காக தானம் செய்யப்பட்ட எல்லா இரத்தத்தையும் பரீட்சித்தல் –

(i) மனித நோய் எதிர்ப்புச் சக்திக் குறைப்புத் தொற்று (எச். ஐ. வி.) ;

(ii) கல்லீரல் அழற்சி 'பி' மற்றும் 'சி' (ஹேபடைட்டிஸ்);

(iii) சிவிலிஸ் ;

(iv) மலேரியா ; அத்துடன்

(v) உலக சுகாதார அமைப்பினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளை அடிப்படையாகக் கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான வேறு ஏதேனும் தொற்று ;

(இ) எல்லா இரத்தத்தையும் பதப்படுத்துதலும், இரத்தக் கூறுகளைத் தயாரித்தலும் ;

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமத்துக்கு இணங்க, இரத்தம் மற்றும் இரத்தக்கூறுகளைக் களஞ்சியப்படுத்தல் ;

(உ) எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த இரத்தத்தையும் கையிருப்பில் இருக்கச் செய்வதையும் அணுகக்கூடியதனையும் இயலுமானளவு உறுதிப்படுத்துதல் ;

(ஊ) தேசிய இரத்தமேற்றல் சேவைகள், அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் பணியாற்றொகுதி உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல்;

(3) குழுவின் உறுப்பினர் எவரும் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகப் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

(4) எவரேனும் உறுப்பினர் ஒருவர், (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதவிவகிப்பதிலிருந்து இல்லாதொழிகின்ற விடத்து, அமைச்சரானவர், 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, பொருத்தமான ஆள் ஒருவரை அத்தகைய ஆளின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

குழுவின் குறிக்கோள்கள்.

**21.** குழுவானது, பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) தேசிய இரத்தமேற்றல் சேவையால் பேணப்படவேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்தல் மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல் ;

(ஆ) உரிமம்பெற்ற நிறுவனங்களால் பேணப்படவேண்டிய நியமங்களை மதிப்பீடு செய்தல்

(இ) ஆட்சேர்ப்புச் செய்யும்போது குறைந்தபட்சம் ஆகக் குறைந்த தகைமைகளை உறுதிப்படுத்துதலும், ஆட்களைப் பயிற்றுவிப்பதற்கான குறைந்தபட்சம் ஆகக் குறைந்த நியமங்கள் பின்பற்றப்படுதலும்.

குழுவின் அலுவல்களை கொண்டு நடாத்துதலும் நடப்பெண்ணும்.

**22.** (1) குழுவானது, அதன் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலை குழுவின் கூட்டமொன்றின்மூலம் ஒழுங்குபடுத்தலாம்.

(2) குழுவின் கூட்டநடப்பெண் எட்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

குழுவின் தத்துவங்கள்.

**23.** பிரிவு 21இல் குறிப்பிட்டவாறான குறிக்கோள்களை அமுலாக்குதலின்போது குழுவானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) நோயாளிகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான உரிய கவனத்துடன் வளவுகள் பேணப்படுகின்றனவா என்பதையும், இரத்தமேற்றல் சேவையின் விடயத்தில் ஏற்புடையதான ஏதேனும் ஒழுங்குவிதி



(ஒ) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளும் சட்டத்தின் நியதிகளின்படி அமைச்சராலும் 18 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவினாலும் வழங்கப்படும் எல்லாப் பணிப்புக்களும் இணங்கியொழுகப்படுதலை உறுதிப்படுத்துதல் ;

(ஓ) இரத்தத்தினால் மாசுபடுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பாதுகாப்பான முறையொன்றின் மூலம் அழித்தல் ;

(ஔ) நோயாளிகளுக்கு இரத்தமேற்றும் நோக்கத்துக்காக உரிமம் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட எல்லா இரத்தத்தையும் செங்குருதிக்கலச் செறிவு அளவுகளையும் அத்தகைய இரத்தம் அல்லது அலகுகள், காலாவதியாகும் தேதிக்கு பத்து நாட்களுக்கு முன்னர், மீளளிக்கப்பட்டும் அது நல்ல நிலையிலும் இருந்தால், ஏற்றுக்கொள்ளல் ;

(க) தானம் செய்யப்பட்ட இரத்தத்தில் நேராகக் கடத்தப்படக் கூடிய தொற்றுக்கள் கண்டுபிடிக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கும் பட்சத்தில், விதித்துரைக்கப்பட்ட தேசிய தராதரங்களுக்கிணங்கத் தோதான பின்தொடர் நடவடிக்கையை எடுத்தலும் ;

(ங) தேசிய இரத்தமேற்றல் சேவையின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு சம்பந்தமாக ஆய்வை நடாத்துதலும், புள்ளிவிபரங்களைச் சேகரித்தலும் பதிவு செய்தலும் ;

(ச) தேசிய இரத்தமேற்றல் சேவையின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்கு தேவையான ஆட்களைப் பயிற்றுவிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.

## பாகம் II

### உரிமங்களை வழங்குதலும் உரிமம் பெற்றோரின் கடமைகளும்

**உரிமங்களை வழங்குதல்.**

*4.* (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்றும் அதன் பின்னரும் தனது நிறுவனத்தினுள் இரத்த வங்கியொன்றைத் தாபிப்பதற்கு எண்ணுகின்றதும் 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியாக மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனமொன்று, விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், உரிமமொன்றுக்காக (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் நாயகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு பின்வருவனவற்றுக்காக, விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) நோயாளிகளுக்கு இரத்தமேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படக் கருதப்படுகின்ற இரத்தத்தை அல்லது இரத்தக் கூறுகளைச் சேகரித்தல் அல்லது பதப்படுத்தல் ; அத்துடன்

(ஆ) நோயாளிகளுக்கு இரத்தமேற்றுகின்ற நோக்கத்துக்காக இரத்தத்தை அல்லது இரத்தக்கூறுகளைக் களஞ்சியப்படுத்தல் அல்லது விநியோகித்தல்.

(2) விண்ணப்பமானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிகத் தகவல்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைப் பெறுவதன் மீது, பணிப்பாளர் தலைமையதிபதி பாதுகாப்பான பொதுச்சுகாதார முறையைப் பேணுவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, —

(அ) அதில் தேவைப்படுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைவாக உரிமமொன்றை வழங்கலாம் ; அல்லது

(ஆ) உரிமமொன்றை வழங்க மறுக்கலாம்.



**உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனம்.**

*19.* ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதற்குத் தகைமையிழந்தவராதல் வேண்டும் —

(அ) அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அல்லது ஏதேனும் மாகாணசபை உறுப்பினராக அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையினது உறுப்பினராக இருப்பின் அல்லது உறுப்பினராகவரின் ; அல்லது

(ஆ) அவர் ஓர் இலங்கைப் பிரஜையாக இல்லாதிருப்பின் அல்லது இலங்கைப் பிரஜையாக இல்லாதொழியின் ;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ், சித்தசுவாதீனமற்றவர் எனக் காணப்பட்டிருப்பின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பின் ; அல்லது

(ஈ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனையை அனுபவித்திருப்பின் அல்லது அனுபவிக்குமிடத்து ; அல்லது

(உ) அவர் குழுவின் உறுப்பினர் ஒருவர் என்றவாறாகத் தனது பணிகளை ஆற்றுவதைப் பங்கமானமுறையில், பாதிக்கக்கூடிய ஏதேனும் நிதி அல்லது அதனைப் போன்ற வேறு நலன்களைக் கொண்டிருப்பின்.

**நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம்.**

*20.* (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் இறப்பு, பதவிதுறத்தல் அல்லது பதவியினின்றும் நீக்கப்படுதல் என்பவற்றுக்காக முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகள் கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து நீக்கப்பட்டாலன்றி மீள்நியமனத்திற்குத் தகைமையுடையவராதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பதவியை வகிப்பதிலிருந்து இல்லாதொழிவதன்மீது, குழுவினது உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

(உ) ஆய்வுகூடச் சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஊ) அத்துடன் பொதுச் சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர்.

(ii) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருகின்ற உறுப்பினர்கள் :—

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் ஒருவர் ;

(ஆ) இரத்த நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரத்த நிபுணர் ஒருவர் ;

(இ) வைத்திய நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர் ஒருவர்;

(ஈ) சத்திர சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் ;

(உ) மகப்பேற்று மற்றும் பெண் நோய் சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மகப்பேற்று நிபுணர் ஒருவர் ;

(ஊ) பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களால், அவற்றுக்கிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் ; அத்துடன்

(எ) தேசிய இரத்தமேற்றல் சேவையிலிருந்து இரண்டு ஆலோசகர்கள் மற்றும் பத்து சிரேஷ்ட மருத்துவ அலுவலர்கள்.



(4) அப்பிரிவின் நியதிகளில் வழங்கப்பட்ட உரிமமொன்று, ஒருவருட காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன், கைமாற்றத் தகாததாகவும் இருத்தல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க அத்தகைய ஏதேனும் கைமாற்றம் வெற்றும் வறிதானதாதலும் வேண்டும்.

உரிமம் வெளிக்காட்டி வைக்கப்படல்.

5. (இதனகத்துப்பின்னர் "உரிமமளிக்கப்பெற்ற நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமமொன்று வழங்கப்பெற்ற தனியார் மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும், அத்தகைய நிறுவனத்தின் துலாம்பரமான இடத்தில் உரிமத்தை எல்லா நேரங்களிலும் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

தேசிய இரத்தமேற்றல் சேவையினால் இடாப்பு பேணப்படுதல்.

6. தேசிய இரத்தமேற்றல் சேவையானது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமம் பற்றிய உரிமம்பெற்ற ஒவ்வொரு நிறுவனமும் தொடர்பான இயைபான எல்லா விபரங்களுடனான இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணிவருதலும் வேண்டும்.

பதிவேடுகள் சம்பந்தமாக உரிமம் பெற்ற நிறுவனத்தின் கடமைகள்.

7. உரிமம் பெற்ற நிறுவனம் ஒன்று, எல்லா நேரங்களிலும் :—

(அ) தேசிய, இரத்தம் பற்றிய கொள்கையைப் பாதுகாத்தலும் போற்றிக் காத்தலும் வேண்டும் ;

(ஆ) பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யக் கோரப்படுமிடத்து அத்தகைய பதிவேடுகளைத் தேசிய இரத்தமேற்றல் சேவைக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

இரத்த வங்கியொன்று தொழிற் படுவதை இல்லா தொழிக்கும் போது தேசிய இரத்தமேற்றல் சேவைக்கு அறிவித்தல் உரிமம் பெற்ற நிறுவனத்தின் கடமையாதல்.

8. (1) உரிமம்பெற்ற நிறுவனமொன்று, உரிமம் எந்த இரத்த வங்கி தொடர்பானதோ அந்த இரத்த வங்கி தொழிற்படுவதை இல்லாதொழித்துள்ளவிடத்து, அது, இரத்த வங்கி தொழிற்படுவதை இல்லாதொழித்துள்ளது என்பதனை தேசிய இரத்தமேற்றல் சேவைக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலைப் பெறுவதன்மீது, தேசிய இரத்தமேற்றல் சேவையானது, 6 ஆம் பிரிவின் கீழ் அதனால் பேணப்படும் இடாப்பிலிருந்து அத்தகைய உரிமம்பெற்ற நிறுவனத்தின் பெயரை நீக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்குமாறு பணிப்பாளர் நாயகத்துக்கு விதந்துரைத்தலும் வேண்டும்.

(3) உரிமம்பெற்ற நிறுவனம் இரத்த வங்கியொன்றைத் தொழிற்படுத்தவில்லை என தேசிய இரத்தமேற்றல் சேவை நம்புவதற்கு காரணமிருக்குமிடத்து, தேசிய இரத்தமேற்றல் சேவையானது, இரத்த வங்கியொன்று தொழிற்படுவதை இல்லாதொழிக்கவில்லையென்பதற்கான எண்பிப்பினை, அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து மூன்று வாரத்திற்குள் கொடுத்துதவுமாறு அதனைத் தேவைப்படுத்தி, அத்தகைய உரிமம்பெற்ற நிறுவனத்துக்குப் பதிவுத்தபால் மூலம் அறிவித்தலொன்றை அனுப்பலாம். அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதியினுள் அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தப்பட்ட எண்பிப்பைச் சமர்ப்பிக்க உரிமம்பெற்ற நிறுவனம் தவறுமிடத்து, 6 ஆம் பிரிவின்கீழ் அதனால் பேணப்படும் இடாப்பிலிருந்து உரிமம்பெற்ற நிறுவனத்தின் பெயரை, தேசிய இரத்த மேற்றல் சேவை அகற்றுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்குமாறு பணிப்பாளர் நாயகத்துக்கு விதந்துரைத்தலும் வேண்டும்.

(4) தேசிய இரத்தமேற்றல் சேவையானது, இடாப்பிலிருந்து எந்த தனியார் மருத்துவ நிறுவனத்தின் பெயர் நீக்கப்பட்டதோ, அத்தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு, அத்தகைய அகற்றுகை மற்றும் உரிமம் நீக்கப்படல் பற்றிய தகவலை எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

உரிமமொன்றுக்கான விண்ணப் பத்திலுள்ள தகவல்களில் ஏதேனும் மாற்றம் பற்றி பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**9.** உரிமம்பெற்ற ஒவ்வொரு நிறுவனமும், அதனது விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் மாற்றமேற்படடின், அம்மாற்றம் ஏற்பட்ட முப்பது நாட்களுக்குள், அத்தகைய மாற்றம் பற்றி எழுத்து மூலம் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

உரிமத்தைப் புதுப்பித்தல்.

**10.** இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, வலுவிலுள்ள உரிமம் காலாவதியாகுவதற்குமுன் மூன்று பஞ்சாங்க மாதங்களுக்குள், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அதன் சார்பாக செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது, பணிப்பாளர் நாயகத்தினால் ஒருவருட காலப்பகுதியொன்றுக்கு புதுப்பிக்கப்படலாம்.



(ஒ) இரத்த அலகு அல்லது இரத்தக்கூறு ஒவ்வொன்றுக்காக தேசிய இரத்தமேற்றல் சேவைக்கு அத்தகைய உரிமம்பெற்ற நிறுவனத்தால் செலுத்தப்பட்ட தொகைக்கு மேலதிகமாக எத்தொகையும் விதித்தலாகாது :

ஆயின் எவ்வாறாயினும், கண்காணிப்புக்குழுவினால் தரப்பட்டுள்ளவாறான வழிகாட்டு நெறிகளுக்கிணங்க ஏதேனும் மேலதிகப் பரிசோதனை நடாத்தப்பட்டால் அதற்கான விதிப்பனவு சேவை விதிப்பனவு அல்லது விதிப்பனவுகள் உரிமம்பெற்ற நிறுவனத்தால் தனியாக மீளப் பெறப்படலாம்.

(ஓ) விதித்துரைக்கப்பட்ட தேசிய தராதரங்களுக்கிணங்கவும் தேசிய இரத்தமேற்றல் சேவையின் கண்காணிப்புக் குழுவின் பணிப்புக்களுக்கிணங்கவும் தொழிற்பாடுகளை கொண்டுநடாத்தல் வேண்டும்.

## பாகம் III

### நிருவாகம்

இரத்தமேற்றல் சேவை கண்காணிப்புக் குழுவின் அமைப்பு.

**18.** (1) (இச்சட்டத்தில் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரத்தமேற்றல் சேவைக் கண்காணிப்புக் குழு என அழைக்கப்படும் குழுவொன்றை அமைச்சர் நியமித்தல் வேண்டும். அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :—

(அ) குழுவின் தவிசாளராக இருக்கவேண்டியவரான பணிப்பாளர் நாயகம் ;

(ஆ) தேசிய இரத்தமேற்றல் சேவையின் பணிப்பாளர் ;

(இ) தேசிய, பாலியல் ரீதியாகக் கடத்தப்படும் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் ;

(ஈ) தனியார் மருத்துவ நிறுவனங்களின் பணிப்பாளர்;

(உ) ஆய்வுகூடச் சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஊ) அத்துடன் பொதுச் சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர்.

(ii) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருகின்ற உறுப்பினர்கள் :—

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் ஒருவர் ;

(ஆ) இரத்த நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரத்த நிபுணர் ஒருவர் ;

(இ) வைத்திய நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர் ஒருவர்;

(ஈ) சத்திர சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் ;

(உ) மகப்பேற்று மற்றும் பெண் நோய் சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மகப்பேற்று நிபுணர் ஒருவர் ;

(ஊ) பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களால், அவற்றுக்கிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் ; அத்துடன்

(எ) தேசிய இரத்தமேற்றல் சேவையிலிருந்து இரண்டு ஆலோசகர்கள் மற்றும் பத்து சிரேஷ்ட மருத்துவ அலுவலர்கள்.



(4) அப்பிரிவின் நியதிகளில் வழங்கப்பட்ட உரிமமொன்று, ஒருவருட காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன், கைமாற்றத் தகாததாகவும் இருத்தல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க அத்தகைய ஏதேனும் கைமாற்றம் வெற்றும் வறிதானதாதலும் வேண்டும்.

உரிமம் வெளிக்காட்டி வைக்கப்படல்.

5. (இதனகத்துப்பின்னர் "உரிமமளிக்கப்பெற்ற நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமமொன்று வழங்கப்பெற்ற தனியார் மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும், அத்தகைய நிறுவனத்தின் துலாம்பரமான இடத்தில் உரிமத்தை எல்லா நேரங்களிலும் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

தேசிய இரத்தமேற்றல் சேவையினால் இடாப்பு பேணப்படுதல்.

6. தேசிய இரத்தமேற்றல் சேவையானது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமம் பற்றிய உரிமம்பெற்ற ஒவ்வொரு நிறுவனமும் தொடர்பான இயைபான எல்லா விபரங்களுடனான இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணிவருதலும் வேண்டும்.

பதிவேடுகள் சம்பந்தமாக உரிமம் பெற்ற நிறுவனத்தின் கடமைகள்.

7. உரிமம் பெற்ற நிறுவனம் ஒன்று, எல்லா நேரங்களிலும் :—

(அ) தேசிய, இரத்தம் பற்றிய கொள்கையைப் பாதுகாத்தலும் போற்றிக் காத்தலும் வேண்டும் ;

(ஆ) பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யக் கோரப்படுமிடத்து அத்தகைய பதிவேடுகளைத் தேசிய இரத்தமேற்றல் சேவைக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

இரத்த வங்கியொன்று தொழிற்படுவதை இல்லாதொழிக்கும் போது தேசிய இரத்தமேற்றல் சேவைக்கு அறிவித்தல் உரிமம் பெற்ற நிறுவனத்தின் கடமையாதல்.

8. (1) உரிமம்பெற்ற நிறுவனமொன்று, உரிமம் எந்த இரத்த வங்கி தொடர்பானதோ அந்த இரத்த வங்கி தொழிற்படுவதை இல்லாதொழித்துள்ளவிடத்து, அது, இரத்த வங்கி தொழிற்படுவதை இல்லாதொழித்துள்ளது என்பதனை தேசிய இரத்தமேற்றல் சேவைக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலைப் பெறுவதன்மீது, தேசிய இரத்தமேற்றல் சேவையானது, 6 ஆம் பிரிவின் கீழ் அதனால் பேணப்படும் இடாப்பிலிருந்து அத்தகைய உரிமம்பெற்ற நிறுவனத்தின் பெயரை நீக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்குமாறு பணிப்பாளர் நாயகத்துக்கு விதந்துரைத்தலும் வேண்டும்.

(இ) தேசிய இரத்தமேற்றல் சேவையின் இரத்த வங்கியிலிருந்து இரத்தத்தையும் இரத்தக் கூறுகளையும் பெறுதல் வேண்டும் என்பதுடன் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த இரத்தத்தையும் கையிருப்பில் இருக்கச் செய்வதையும் அணுகக் கூடியதனையும் இயலுமானளவு உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) நோயாளிகளுக்கு வழங்கப்படும் அல்லது ஏற்றப்படும் இரத்தமும் இரத்தக் கூறுகளும் பரிசோதனை செய்யப்பட்டு பரீட்சிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(உ) இரத்தமேற்றல் சேவையால் பயிற்றப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மட்டுமே இரத்தமேற்றலில் ஈடுபடுகின்றார்கள் என்பதை உறுதிசெய்து, தேசிய இரத்தம் பற்றிய கொள்கை மற்றும் தேசிய இரத்தமேற்றல் சேவையால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கத் தனியார் மருத்துவ நிறுவகங்களைச் சேர்ந்த மருத்துவ அலுவலர்களுக்கு அவசியமான பயிற்சி வழங்குதலையும் உறுதிப் படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும் ;

(ஊ) இச்சட்டத்தினதும் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் எல்லா ஏற்பாடுகளுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(எ) கண்காணிப்புக் குழுவினாலும் அமைச்சரினாலும் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(ஏ) இரத்தத்தினால் மாசுபடுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பாதுகாப்பான முறையொன்றின் மூலம் அழித்தல் வேண்டும் ;

(ஐ) தானம் செய்யப்பட்ட இரத்தத்தில் நேரான கடத்தப்படக்கூடிய தொற்றுக்கள் கண்டுபிடிக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கும்பட்சத்தில், விதித்துரைக்கப்பட்ட தேசிய நியமங்களுக்கிணங்க தோதான பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் ;



உரிமத்தை இல்லா தாக்குதல்.

11. உரிமம்பெற்ற நிறுவனம் –

(i) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாட்டை அல்லது அத்தகைய உரிமம், எந்த நியதி அல்லது நிபந்தனைக்கு அமைவானதோ, அவ்வேதேனும் நியதி அல்லது நிபந்தனையை மீறியுள்ளதென ; அல்லது

(ii) அதனால் அல்லது அத்தகைய வங்கியினூடாக வழங்கப்பட்ட சேவைகளுக்குத் தம்மை உட்படுத்திய ஆளின் அல்லது ஆட்களின் பாதுகாப்புக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதான அத்தகைய முறையொன்றில் இரத்தவங்கியைத் தொழிற்படுத்தியுள்ளதென ; அல்லது

(iii) தேசிய இரத்தம் பற்றிய கொள்கையைப் போற்றிக்காக்கத் தவறியதென,

பணிப்பாளர்–தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து, உரிமம் பெற்ற நிறுவனத்துக்குக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதன் பின்னர், தேசிய இர்த்தமேற்றல் சேவையின் விதந்துரையின்மீது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்கலாம் அல்லது உரிமமொன்றைப் புதுப்பிக்க மறுக்கலாம்.

உரிமம் வழங்க மறுத்தல் மற்றும் இல்லா தாக்குதல் முதலியவற்றுக்கு எதிரான மேன் முறையீடுகள்.

12. (1) தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு உரிமமொன்றை வழங்க மறுத்தல் அல்லது உரிமமொன்று இல்லாதொழித்தல் அல்லது உரிமமொன்றைப் புதுப்பிக்க மறுத்தல் என்னும் பணிப்பாளர் நாயகத்தின் மறுப்பினால் இன்னலுறுகின்ற ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனமொன்று, விடயத்துக்கேற்ப இல்லாதொழிந்த உரிமத்தை அல்லது உரிமமொன்றை வழங்கமறுத்த அல்லது உரிமமொன்றைப் புதுப்பிக்க மறுத்த தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் முப்பது நாட்களுள், எழுத்துமூலம் அத்தகைய தீர்மானத்துக்கு எதிராக சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அவருக்கு செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் அமைச்சுச் செயலாளரின் தீர்மானத்தினால் இன்ன

லுறுகின்ற ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனமொன்று, அத்தகைய தீர்மானத்துக்கு எதிராக எழுத்துமூலம் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அவரது தீர்மானம் இறுதியானதாதல் வேண்டும். இவ்விரு மேன்முறையீடுகளும் ஒரு மாதகாலத்தினுள் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

(3) மேன்முறையீடுகளை கேட்பதற்கான நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

பணிப்புக்கள்.

**13.** அமைச்சரானவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயனளிப்பதற்காக காலத்துக்குக் காலம் எழுத்து மூலம் பொதுவான அல்லது விசேடமாக பணிப்புக்களை தேசிய இரத்தமேற்றல் சேவை, அரசாங்க வைத்தியசாலை அல்லது ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புக்களுக்கு பயனளிப்பது தேசிய இரத்தமேற்றல் சேவை அரசாங்க வைத்தியசாலை அல்லது தனியார் மருத்துவ நிறுவனத்தின் கடமையாதலும் வேண்டும்.

உட்பிரவேசிப்பதற்கான தத்துவங்கள்.

**14.** தேசிய இரத்தமேற்றல் சேவை அல்லது தேசிய இரத்தமேற்றல் சேவையால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அத்தகைய உரிமத்தின் நியதி நிபந்தனைகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, எவ் வளவுகளில் உரிமம்பெற்ற நிறுவனம் இரத்த வங்கியொன்றை தொழிற்படுத்துகின்றதோ அவ் வளவுகளுக்குள் அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சேவைகளை எவ் வளவுகளில் தொடர்பில் உரிமம்பெற்ற நிறுவகம் வழங்குகின்றதோ, அவ் வளவுகளுக்குள் எந்நேரத்திலும் உட்பிரவேசிக்கலாம்.

உரிமமொன்று இன்றி இரத்தவங்கியொன்றைத் தொழிற்படுத்துவது தவறொன்றாகும்.

**15.** இச்சட்டத்தின்கீழ் உரிமம் ஒன்றைப் பெறாமல், இரத்த வங்கியை நடாத்தும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற தனியார் மருத்துவ நிறுவனமொன்றின் பணிப்பாளர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழுவருடங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அலலது அத்தகைய குற்றப் பணம் ; அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.



தவறுகள்.

**16.** (அ) இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற ;

(ஆ) அத்தகைய கூற்றானது முக்கியமான விபரங்களில் பிழையானது எனத் தெரிந்துகொண்டு, விண்ணப்பமொன்றில் அல்லது அவரால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் அல்லது அவரால் பேணப்படும் ஏதேனும் பதிவில் ஏதேனும் கூற்றை செய்கின்ற ; அல்லது

(இ) தேசிய இரத்தமேற்றல் சேவையை அல்லது அத்தகைய சேவையால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளை, இச்சட்டத்தால் அளிக்கப்பட்ட தத்துவங்கள் அத்தகைய சேவையால் அல்லது ஆளினால் பிரயோகிக்கையில் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற ;

ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து வருடங்களை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

உரிமம்பெற்ற நிறுவனங்களின் கடமைகள்.

**17.** (1) உரிமம்பெற்ற நிறுவனம் ஒன்று,—

(அ) ஆபத்து குறைந்த தன்னிச்சையான வேதனமற்ற தானம் அளிப்பவர்களிடமிருந்து மட்டுமே இரத்தம் சேகரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக தானம் அளிப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும் ;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திட்டவட்ட அளவுகளுக்கிணங்க இரத்தத்தைக் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளைத் தாபித்தல் வேண்டும் ;